# பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-6

ந.க.எண்.019523/எம்/இ2/2022, நாள். 12 .04.2023.

பொருள்: பள்ளிக் கல்வித் துறை – 2022-23 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை அறிவிப்பு - கல்விச் சுற்றுலா செல்ல தேர்வு செய்யப்பட்ட இல்லம் தேடிக் கல்வி ஒருங்கிணைப்பாளர் விவரம் – கடவுச் சீட்டு (Passport) பெறுதல் – சார்பு.

பார்வை:
1. பள்ளிக் கல்வித் துறைக்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகள் 2022-2023- அறிவிப்பு எண்: 12.
2. இவ்வாணையரக கடித ந.க.எண். 019528/எம்/இ1/2022, நாள்.10.01.2023, 06.02.2023, 02.03.2023, 17.03.2023, 22.03.2023, 30.03.2023 மற்றும் 10.04.2023.
3. சென்னை-6, மாநிலத் திட்ட இயக்குநரின் கடித ந.க.எண். 2362/சி7/எஸ்எஸ்/இதேக/2022, நாள்.05.04.2023

*******

பார்வை (1)-இல் காணும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலக்கிய மன்றம், வினாடி வினா போட்டிகள், சிறார் திரைப்படங்கள் திரையிடுதல் மற்றும் வானவில் மன்றம் போட்டிகள் நடத்தப்பட்டு 150 மாணவர்கள் மற்றும் 30 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு, பார்வை (2)-இல் காணும் செயல்முறை நாள்.10.04.2023-இன்படி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்வி சுற்றுலா செல்ல கடவுச் சீட்டுகள் விண்ணப்பித்து இவ்வாணையரகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பார்வை (3)-இல் காணும் சென்னை-6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் கடிதத்தில், இல்லம் தேடிக் கல்வி மையங்களில் சிறந்து விளங்கிய ஒருங்கிணைப்பாளர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல ஒருங்கிணைப்பாளர் விவரம் இவ்வாணையரகத்திற்கு பெறப்பட்டுள்ளது. எனவே, இணைப்பு (1)-இல் கல்விச் சுற்றுலா செல்ல தேர்வு செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைப்பாளர்களுக்கு தகவல் தெரிவித்து இணைப்பு (2)-இல் உள்ள படிவத்தில் ஒப்புதல் பெறவேண்டும். மேலும், தேர்வு செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைப்பாளர்களுக்கு தங்கள் மாவட்டத்திற்கு அருகாமையிலுள்ள மண்டல கடவுச் சீட்டு அலுவலகத்திற்கு

(Regional Passport Office) (சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மண்டலம்) விண்ணப்பித்து கடவுச் சீட்டு பெற்று இவ்வாணையரகத்திற்கு அனுப்பி வைக்க சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு-
1. இல்லம் தேடிக் கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் விவரம்.
2. ஒப்புதல் கடிதம்.

பள்ளிக்கல்வி ஆணையருக்காக

12/4/23

பெறுநர்-
மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், (தருமபுரி, தஞ்சாவூர், விழுப்புரம், தென்காசி, திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம்) - (மின்னஞ்சல் வாயிலாக).

| S No | District | Block | Name | EMIS Id | Date of | Mobile Number | Major Subject | Visiting Country |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | DHARMAPURI | Nallampalli | P.JAYAPAL | 20049176 | 13-06-2022 | 9894669738 | Maths | Finland |
| 2 | THANJAVUR | Sethubavachatra | P. Rajmohan | 20198400 | 24.12.2021 | 9865410797 | interesred in Maths | USA |
| 3 | VILLUPURAM | Mailam | M. ARULKUMARAN | 20069330 | 02.03.2022 | 6380985099 | English | UK |
| 4 | TENKASI | Keelapavoor | J.JEYAPRATHOPSINGH | 20262926 | 02.02.2022 | 9080068490 | Science- Chemistry | France |
| 5 | TIRUNELVELI | Ambasamudram | ABEL SATH | 20259319 | 01/02/2022 | 9842828153 | interested in Science | Russia |
| 6 | KANCHEEPURAN | Uthiramerur | S JAHIR HUSSAIN | 20021546 | 23.11.2021 | 9787179284 | BT SCIENCE | South Korea |

## இல்லம் தேடிக் கல்வி ஒருங்கிணைப்பாளர் ஒப்புதல் கடிதம்

அனுப்புநர்-

------------------------,

------------------------,

பெறுநர்-

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்,

------------------------------,

------------------------------.

மதிப்பிற்குரிய ஐயா / அம்மையீர்,

பொருள்- திரு / திருமதி ........................................................ வெளிநாட்டிற்கு கல்வி சுற்றுலா அழைத்துச் செல்ல இசைவு தெரிவித்தல் – தொடர்பாக.

*****

.............................................................. மாவட்டம், ........................................................................ ஊர் ............................................................................ எனும் இல்லம் தேடிக் கல்வி மையத்தில் ஒருங்கிணைப்பாளராக பணிபுரிந்து வரும் ............................................................. நான், பள்ளிக் கல்வித் துறை சார்பில் வெளிநாட்டிற்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல முழு சம்மதம் தெரிவிக்கிறேன். மேலும், மேற்படி பயணத்தில் ஏதேனும் இடையூறுகள் இருப்பின் அதற்கான முழுப் பொறுப்பினை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

நன்றி,

கையொப்பம்

நாள்-

இடம்-